மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட நிபுணத்துவம் பெற்ற ஒருவரை, அதாவது வழக்குரைஞர் பணியில் இருப்பவர்களில் இருந்தோ அல்லது நீதித் துறையில் இருந்தோ எடுத்து நியமிக்கலாம் என்று அரசு கருதியுள்ளது.

தமிழகத்தில் வழக்குரைஞர்கள் நலநிதி.

354—(*வினா எண் 9273) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் வழக்குரைஞர்கள் நலநிதி ஏற்படுத்தும் திட்டம் காலதாமதம் ஏற்பட காரணம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வழக்குரைஞர்கள் நலநிதித் திட்டத்தினை விரைவில் கொண்டு வருவது குறித்து அரசு யோசித்து வருகிறது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்குரைஞர் நல நிதி ஏற்படுத்துவதில் உள்ள காலதாமதத்தைப் போக்க வேண்டுமென்ற வகையில்தான் இந்த வினாவையே நான் போட்டு இருந்தேன். கிட்டத்தட்ட 25,000 வழக்குரைஞர்கள் இருக்கிறார்கள். அந்த வழக்குரைஞர்களுக்காக நல நிதியினை ஏற்படுத்த வேண்டும் என்ற திட்டத்தை முதலில் புரட்சித் தலைவர் அவர்களின் அரசுதான் அதிலும் குறிப்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள்தான் இந்தச் சட்டமன்றத்திலே அறிவித்தார்கள். அவ்வாறு அறிவித்த பிறகு மராட்டிய மாநிலம், கேரளா போன்றவை எல்லாம் சட்டங்களைக் கொண்டு வந்தார்கள். எனவே வருகிற கூட்டத் தொடரிலேயே இந்த வழக்குரைஞர்களுக்கான நல நிதிச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்ற முடிவை எடுத்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

1987 ஏப்ரல் 9]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற மாநிலங்களுக்கு இல்லாத ஒரு பிரச்சினை நமது மாநிலத்தில் உருவாகி இருக்கிறது. வழக்குரைஞர்களைப் போலவே தனியாக சுயதொழிலில் ஈடுபட்டு வருகின்ற பல்வேறு பிரிவினர் தங்களுக்கும் இதுபோன்ற நல நிதித் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்ற கோரிக்கைகளை எல்லாம் தந்திருக்கிறார்கள். அதன் காரணமாக எல்லாவற்றையும் நீதித் துறை ஆய்ந்து கொண்டிருக்கிறது. நீதித்துறை எல்லாவற்றையும் ஆய்ந்து நிதிநிலைக்கேற்ப முடிவு செய்ய வேண்டும். மற்ற மாநிலங்களில் அரசினுடைய நிதியினை அதிகமாகத் தர வேண்டாத நிலைமை இருக்கிறது. நமது மாநிலத்தில் தரப்பட்டிருக்கின்ற கோரிக்கை என்னவென்றால் அரசு அந்த நிதியைத் தர வேண்டுமென்று கேட்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் அவர்கள் பணியிலிருந்து போகிறபோது 30 ஆயிரம் ரூபாய் தரவேண்டும் என்று கோருகிறார்கள். அப்படி ஆளுக்கு 30 ஆயிரம் தர வேண்டும் என்றால் அதை ஈடுகட்டுவதில் நிதிப் பற்றாக்குறை சுமையாக இருக்கும். ஆனால் அப்படி எந்த மாநிலத்திலும் நடைமுறைப்படுத்தவில்லை. எனவேதான் இவற்றை எல்லாம் ஆய்ந்து நிதிநிலைமைக்கேற்ப, மற்ற பிரிவினர் தந்திருக்கின்ற கோரிக்கைகளையும் கருத்தில் கொண்டு முடிவெடுக்க வேண்டி இருக்கிறது. அதைத்தான் நீதித்துறை ஆய்ந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஏறத்தாழ அமைப்புகளின் கீழ் வராத மூன்றே கால் கோடி பேர்களுக்கு இன்சூரன்ஸ் திட்டத்தை மற்ற மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டுகிற முறையில் இந்த அரசு நடைமுறைப்படுத்திக் கொண்டு வருகிறது. விவசாயக் கூலி வேலை செய்பவர்கள், கைவண்டி இழுக்கும் தொழிலாளர்கள், பாரம் சுமக்கும் தொழிலாளர்கள் ஆகியோரெல்லாம் இறந்துவிட்டால் 10 ஆயிரம் ரூபாய் கொடுக்கிற வகையில் இன்சூரன்ஸ் திட்டம் நமது மாநிலத்தில் அமல் நடத்தப்பட்டு வருகிறது. வழக்குரைஞர்களிடத்திலிருந்து நிதியினைப் பெற்று, அதாவது 2 ரூபாய் என்ற அளவுக்குப் பெற்று குரூப் இன்சூரன்ஸ் செய்து, வழக்குரைஞர்கள் இறந்து விட்டால் 20,000 ரூபாய் கொடுக்கிற வகையிலும் ஓய்வு பெறுகிறபோது 20,000 ரூபாய் முதல் 50,000 வரையில் கொடுக்கிற வகையிலும் திட்டத்தை ஏற்படுத்தி அதற்கு

முழுக்க, முழுக்க வழக்குரைஞர்களிடத்திலிருந்தே பணம் வருகிற வகையில்தான் இந்தத் திட்டத்தை எல்லா மாநிலங்களிலும் நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். ஆகவே நான் இங்கே ஒரு வேண்டுகோளாகவே வைக்க விரும்புகிறேன். வழக்குரைஞர் நல நிதித் திட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று சொன்னதே நமது அரசாங்கம்தான். நம்மைப் பார்த்து மற்றைய மாநிலங்களில் கொண்டு வந்திருக்கிறார்கள். வழக்குரைஞர்கள் சொல்வது போல் அதாவது அரசே அந்த நிதியினைக் கொடுக்க வேண்டும் என்ற கருத்தை ஒதுக்கியேவிடலாம். அவர்களே அதற்கு கான்ட்ரிபியூஷன் செய்கிற வகையில் இந்த நல நிதிச் சட்டத்தை உடனே கொண்டு வருவதற்கு அரசு விரைவான நடவடிக்கை எடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசால் பலவிதமான சலுகைகளைப் பெற்றுக்கொண்டு வருகிற நலிந்த பிரிவினரையும், ஒதுக்கப்பட்ட பிரிவினரையும் வழக்குரைஞர்கள் பிரிவிலே சேர்ப்பது என்பது சரியல்ல. அப்படிப் பேசுவது சரியல்ல. அது வேறு, இது வேறு. நாம்தான் இந்தியத் துணைக்கண்டத்திலேயே வழக்குரைஞர்களுக்கான நல நிதி கொண்டு வரவேண்டுமென்று முடிவு செய்து அவையிலே அறிவித்தோம். அவ்வாறு அறிவித்த பிறகு தமிழ்நாடு பார் கவுன்சில் மற்றும் வழக்குரைஞர்கள் சங்கங்கள் போன்றவை எல்லாம் பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிற நிலைமையில், அவை தமிழக அரசினுடைய நிதிநிலைமைக்கு அப்பாற்பட்ட கோரிக்கைகளாக இருப்பதன் காரணத்தால், இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டி இருப்பதால்தான் தாமதம் ஏற்படுகிறது. இதைத்தான் அரசு ஆய்ந்துகொண்டு வருகிறது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின் துணைத் தலைவர் அவர்கள் சொன்னதுபோல் இந்தத் திட்டத்தை இந்த அரசு முதலில் அறிவித்துவிட்டு இதற்கான ஏற்பாடுகள் எல்லாம் தீவிரமாக நடந்து கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் ஒன்றை நாம் கவனிக்க வேண்டும். அதாவது எனைய பல சமுதாயத்தினருக்காக எல்லாம் கூட பல புரட்சிகரமான திட்டங்களை இன்றைக்குச் செயல்படுத்திக் கொண்டிருக்கிற சூழ்நிலையில், இன்றைக்குத் தமிழக

1937 ஏப்ரல் 9]

அரசைப் பொறுத்தவரையில் * *

அரசு இந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டதாக ஒரு கருத்து இன்றைக்கு நிலவுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குற்றச்சாட்டு நீக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கறிஞர்களுக்கும் அரசுக்கும் எந்த வித கருத்து வேறுபாடும் இல்லை. வழக்கறிஞர்கள் சில அரசியல் கட்சிகளால் தூண்டி விடப்பட்டு ஒரு சில குறைகளைச் சொல்லுகிறார்கள் என்பதை வைத்துக்கொண்டு * *

என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக் கூடாது. அந்த திட்டத்தைக் கொண்டு வந்ததே அரசுதான். வழக்கறிஞராக இருக்கிற திரு. டி. ஆர். வேங்கடரமணன் அவர்களுக்கு இது புரியவில்லையே என்று எனக்கு வேதனையாக இருக்கிறது. காரணம் மற்ற மாநிலங்களிலே உள்ள அரசுகள் இதற்காக எந்த நிதியும் செலவு செய்யவில்லை. தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் முழுக்க முழுக்க ஆளுக்கு ரூ. 30 ஆயிரம் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை வந்திருக்கிறது. அதுதான் பிரச்சினையாக இருக்கிறது. நலிந்த பிரிவினரோடு வழக்கறிஞர்களை ஒப்பிட்டு அவர்கள் ஏதோ பட்டினியால் வாடுகிறார்கள் என்பதைப் போல வழக்கறிஞர்களைப் பற்றி திரு. வேங்கடரமணன் அவர்கள் சொல்ல வேண்டாம்.

திரு. ஆ. சந்திரசேகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வழக்கறிஞர்களுக்கான நலநிதி போல் வழக்கறிஞர்களுடைய கிளார்க்குகளுக்கும் நல நிதி திட்டம் ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது வேண்டாம், பிறகு வழக்கறிஞர்களுடைய கிளையன்ட்டிற்கும் கேட்பீர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்படுகிறது.